# ஜீ. ஜீ பொன்னம்பலத்தின் அரசியல் தலைமைத்துவம் ஒரு விமர்சன ரீதியான மீள்பார்வை

சி. திருச்செந்தூரன்

**ஆய்வுச் சுருக்கம்**

1930களின் தொடக்கத்தில் அரசியலினுள் பிரவேசித்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் 1944 ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியை தோற்றுவித்தார். இலங்கைத் தமிழர் அரசியல் செல்நெறியில் முதன் முதலாக தோற்றம் பெற்ற அரசியல் கட்சியான தமிழ்க் காங்கிரஸ், 1977 ஆம் ஆண்டு வரைக்கும் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமைத்துவத்தின் கீழ் பல்வேறு தடங்களில் பயணித்து இற்றை வரைக்கும் இயங்கு நிலையில் உள்ளது. இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியில் சம பிரதிநிதித்துவ கோரிக்கையை முன்னிறுத்தி செயற்பட்ட ஜீ. ஜீ பொன்னம்பலம் சுதந்திரத்தின் பின்னர் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப்பகிர்வு என்ற கொள்கையை வலியுறுத்தினார். இருந்த போதிலும் 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் தனிநாட்டுக் கொள்கையை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தார். ஜீ. ஜீ. பொன்னம்பலம் 10 பொதுத்தேர்தல்களில் போட்டியிட்டு இதில் 6 தேர்தல்களில் எதிரணி வேட்பாளர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றிருக்கின்றார். குறிப்பாக 1934 தொடக்கம் 1960 வரை தொடர்ச்சியாக 26 வருடங்கள் சட்டசபை உறுப்பினராக இருந்த சாதனைக்குரியவர். 1949 இற்கும் 1953 ற்கும் இடையில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் கைத்தொழில், கடற்றொழில் அமைச்சராக இருந்த காலத்தில், காங்கேசன்துறை சீமேந்துத்தொழிற்சாலை, வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை, போன்ற பல தொழிற்சாலைகள் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் திறக்கப்பட்டன. அதே வேளை ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் சமபிரதிநிதித்துவக் கோரிக்கை தொடர்பாகவும், இந்திய வம்சாவழியினரின் பிரஜாவுரிமை தொடர்பான ஜீ.ஜீ பொன்னம்பலத்தின் நிலைப்பாடு பற்றியும் சமூகத்தில் பல்வேறுபட்ட சந்தேகங்கள் நிலை பெற்றுள்ளன. இத்தகைய சந்தேகங்களை தெளிவுபடுத்தி, ஜீ.ஜியின் பலம், பலவீனம் ஆகியவற்றை அடையாளப்படுத்தி அதனூடாக ஜீ. ஜீ பொன்னம்பலத்தின் அரசியல் ஆளுமையை மீள்பார்வை செய்கிறது.

**திறவுச் சொற்கள்:** அரசியல் தலைமைத்துவம், ஜீ. ஜீ. பொன்னம்பலம், இலங்கைத்தமிழர், பலம், பலவீனம்.

## 1) அறிமுகம்

ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களுடைய அரசியல் பிரவேசம் 1929ஆம் ஆண்டு இடம்பெற்றது. குறிப்பாக டொனமூர் குழுவினரின் சிபார்சுகள் தொடர்பாக இலங்கையர்களிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவி வந்தது. இந்நிலையில் அப்போதைய முக்கிய தலைவர் சேர். பொன். இராமநாதன் டொனமூர் சிபார்சுகளை ஆட்சேபிப்பதற்காக இலண்டன் பயணமானார். அதேவேளை 1929ஆம் ஆண்டில் கொழும்பில் சில தமிழ்ப் பிரமுகர்கள் கூடி சிபார்சுகளை ஏற்பதாகத் தீர்மானம் நிறைவேற்றினர். அக்கூட்டத்திற்கு வந்திருந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் திடீரென எழுந்து கமிசன் சிபார்சுகளால் ஏற்பட இருக்கும் தீமைகளைச் சுட்டிக்காட்டி சிபார்சுகளை ஏற்கக் கூடாதென்ற தீர்மானத்தை முன்மொழிந்தார். தீர்மானம் அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது. (சிவபாதம். ந,1977, ப.02) இத்தகைய பொன்னம்பலத்தின் செயற்பாடு 1929ஆம் ஆண்டிலிருந்து அவரை கவனிப்புக்குரியவராக

மாற்றியது. அத்துடன் 1939ஆம் ஆண்டு இலங்கையின் அரசாங்க சபையில் எதிர்கால அரசியல் திட்ட சிபார்சுகளின் போது ஐம்பதுக்கு ஐம்பது என்ற சம பிரதிநிதித்துவ அடிப்படையில் சட்டசபைப் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும் என வாதிட்டுக் கொண்டார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கென சிறந்த கட்சி ஒன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் கொழும்பு மாநகரில் ஒரு மகாநாட்டைக் கூட்டினார். அம் மகாநாட்டிற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள முதிர்ந்த அரசியல்வாதிகளும், ஏனைய பகுதிகளிலிருந்து அநேக பிரதிநிதிகளும் வந்திருந்தனர். அம் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டபடி 1944ஆம் ஆண்டு ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசை ஸ்தாபித்ததோடு அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். (சிவபாதம். ந:1977, ப.04) 1947ஆம் ஆண்டு இடம்பெற்ற இரு சபைப் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒன்பது பேர் போட்டியிட்டு ஏழு பேர் வெற்றி பெற்றுக் கொண்டனர். குறிப்பாக யாழ்ப்பாணத் தொகுதியிலிருந்து ஜீ.ஜீ.பொன்னம்பலம், காங்கேசன்துறைத் தொகுதியிலிருந்து எஸ். ஜே.வி. செல்வநாயகம், வட்டுக்கோட்டைத் தொகுதியிலிருந்து கே. கனகரத்தினம் பருத்தித்துறைத் தொகுதியிலிருந்து எஸ்.இராமலிங்கம் கோப்பாய் தொகுதியிலிருந்து கு.வன்னியசிங்கம், சாவகச்சேரித் தொகுதியிலிருந்து வி.குமாரசாமி திருகோணமலைத் தொகுதியிலிருந்து கே. சிவபாலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். (சிவபாதம். ந:1977, ப.04)

1949ஆம் ஆண்டு இந்திய வம்சாவளித்தமிழர் தொடர்பான மசோதாவினை ஏற்றுக் கொள்வதா? நிராகரிப்பதா? என்றபிரச்சினையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான குழுவினர் கட்சியை விட்டு வெளியேறி பின்னர் 1949ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி தமிழ் அரசுக்கட்சியை உருவாக்கிக் கொண்டனர். ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் 1934 ம் ஆண்டு தொடக்கம் 1960 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக சட்டசபைப் பிரதி நிதித்துவத்தை வகித்தவர் என்ற சிறப்புக்குரியவர்.

இலங்கை அரசியல் வரலாற்றில் அரசியல் தலைமைகளின் ஆளுமைகளையும் குறிப்பாக அவர்கள் எதிர்கொண்ட சவால்களையும் நெருக்கீடுகளையும் மதிப்பீடு செய்வது அரசியல் அபிவிருத்தி நோக்கில் மிகவும் அவசியமானதாகும் அந்த வகையில் இவ் ஆய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு முன்னெடுக்கப்படுகிறது எனலாம்.

- இலங்கைத் தமிழ் அரசியல் தலைமைத்துவம் என்ற என்ற வகையில் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் சிறப்புக்களை வெளிக் கொணர்தல்.
- ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் பலவீனங்களை அடையாளம் காணல்.
- ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் அரசியல் பணிகளை மதிப்பீடு செய்தல்.

**ஆய்வின் முறையியல்**

இவ் ஆய்வானது அரசியல் சமூகவியல் அணுகுமுறையின் ஊடாக முன்னெடுக்கப் பட்டுள்ளது. சமூக நிறுவனங்களையும், சமூகக் குழுக்களையும், தனிமனிதர்களையும் அவற்றிற்கிடையிலான அரசியல் தொடர்புகளையும் முதன்மைப்படுத்தி ஆய்வுசெய்யும் முறையே அரசியல் சமூகவியல் அணுகுமுறையாகும். "அரசியல் சமூகவியல் என்பது அரசறிவியல் சமூகவியல் ஆகியவற்றுக்கிடையே ஒரு இணைப்புப் பாலமாக அமைந்தது. அதனை

ஆங்கிலத்தில் ஒரு "கைபிரிட்" கற்கைநெறி என அழைத்தனர். அரசியல் பிரச்சினைகள் பலவும் சமூகப் பிரச்சினையோடு தொடர்பு கொண்டவை என்ற அடிப்படையில் இரண்டு கற்கைநெறிகளும் இணைந்து செயற்பட வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இவ்வாறான அணுகுமுறையினால் அரசறிவியல் மற்றும் சமூகவியல் கற்கை நெறிகள் பயன்பெறுகின்றன." (நாதன். கா.ச.2002, ப.11) இவ் அணுகுமுறையைப் பயன்படுத்தியவர்களில் மைக் ஐவர் (Maciver), டேவிட் ஈஸ்டன் (David Easton), அல்மண்ட் (Almond), டேவிட் ரூமன் (David Truman) போன்றவர்கள் முக்கியமானவர்கள். "இந்த வகையில் மனிதன் ஒரு சமூகப்பிராணி என்ற வகையில் அவனிடம் அரசியல் பிரச்சினைகள் எவ்வாறு தோன்றுகின்றன? அவற்றை எவ்வாறு தீர்த்து வைப்பது? என்ற யதார்த்த நோக்கோடு உருவாக்கம் பெற்றது அரசியல் சமூகவியல்" அணுகுமுறையாகும். (நாதன். கா.ச.2002, ப.15) இவ் ஆய்வின் முறையியலாக முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் கொள்ளப்படுகின்றன.

முதலாம் நிலைத்தரவுகளாக The Marathan Crusade for "Fifty Fifty" (Balanced Representation) in the State Council – 1939. என்கின்ற ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் நூல், ஹன்சாட், தமிழ்க் காங்கிரசின் ஆண்டு மலர்கள் கொள்ளப்படுவதுடன் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் குடும்ப உறுப்பினர்களுடனான நேர்காணல்கள், ACTC உறுப்பினர்களுடனான நேர்காணல்கள், தமிழரசுக்கட்சி உறுப்பினர்களுடனான நேர்காணல்கள், ஏனைய அரசியல் பிரமுகர்களுடனான நேர்காணல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது மாத்திரமன்றி கட்டமைக்கப்பட்ட 100 வினாக்கொத்துக்கள் 18 வயதிற்கு மேற்பட்டவர்களிடம் விநியோகிக்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத்தரவுகளாக ஜீ. ஜீ. பொன்னம்பலம் பற்றிய நூல்கள், ஆய்வுச் சஞ்சிகைகள், தேசிய பத்திரிகைகள், அறிக்கைகள், இணையத் தகவல்கள் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு இவ் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

**ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமைத்துவச் சிறப்புக்கள்**

முற்போக்கான வகையில் ஒரு நாட்டின் தலைமைத்துவம், நல்ல கொள்கைகளை உருவாக்க முடியுமானால், அதனால் சிறப்பாக நாட்டை ஆளமுடியும். பிளவுகள், பின்னடைவுகள் இன்றி சமூக முன்னேற்றம் ஏற்படும். அந்தவகையில் இலங்கையின் சிறுபான்மை இனமான தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவங்கள், காலத்திற்குக் காலம் சிங்கள தலைவர்களால் ஏமாற்றப்பட்டு வந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இருந்த போதிலும் சில அரசியல் தலைமைத்துவங்கள் நெருக்கடிமிக்க காலகட்டத்திலும், பாதகமான களச் சூழ்நிலைகளிலும் குறிப்பிடத்தக்களவு நலன்களை தமது இனக்குழுமம் சார்பாக உறுதிப்படுத்தியுள்ளமையை அடையாளம் காணமுடிகிறது. அந்தவகையில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவராக இருந்த ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் பின்வரும் தலைமைத்துவச் சிறப்பியல்புகளைக் காண முடிகிறது.


**(i) வசீகரத் தலைமைத்துவ இயல்பு**

பிரபல ஜேர்மனிய சமூகவியலாளரான மக்ஸ் வெபர் (Max Weber) அவர்களின் கூற்றுப்படி தலைமைத்துவத்தில் மூன்றுவகை உண்டு. பாரம்பரியத்தின் அடிப்படையில் தோன்றும் அதிகாரம் இவற்றுள் முதலாவது அதாவது அழிவற்ற பழமையின் மீதும் போற்றப்படும் வழமைகள் மீதும் தோன்றும் அதிகாரம் இதுவாகும். இரண்டாவது சட்டபூர்வமான அதிகாரம், அதிகாரம்

அவ்வப்பொழுது நடைமுறையிலிருக்கும் சட்ட ஒழுங்கமைப்பின் வலுமீது நம்பிக்கையை வைத்துக் கொண்டிருக்கும் அதிகாரம். மூன்றாவது சமகால சமூகத்திற்கு வேண்டிய வசீகர அதிகாரம் ஆகும்.

வசீகரத் தலைவன் ஏனைய தலைவர்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுவான். குறிப்பாக இத்தலைவனுக்கு மக்கள் காட்டுவது அன்பு மாத்திரமல்ல பக்தியுங் கூடவாகும். இரண்டாவதாக மக்கள் இத்தகையவர்களை வியந்து பாராட்டுவதுடன் மதிப்பச்சத்துடனும் நோக்குவார்கள். மூன்றாவதாக மதிப்பு உணர்ச்சியிலும் பார்க்க வணக்க உணர்ச்சியே மக்கள் மத்தியில் மேலோங்கி நிற்கும். மொத்தத்தில் வசீகரத் தலைவர் மீது மக்கள் ஈடுபாடு கொண்டிருப்பதை "நம்பிக்கை" என்று கூறுவதைவிட தலைவனை முழுமையாக விசுவாசிப்பது எனக் கொள்வதே பொருத்தமானது. வசீகரம் என்பது மானிட உயிர் ஒன்றின் புறநடைத் தன்மையான ஒரு குணாதிசயமெனக் கொள்ள வேண்டும் என மக்ஸ் வெபர் குறிப்பிடுகின்றார். குறித்த ஒரு மானிடத்தின் பண்புத் தரத்திலும், அசாதாரண புனிதத்திலும், அஞ்சா நெஞ்சத்திலும், முன்மாதிரியான குணாதிசயத்திலும் அவன் மீது தாம் கொண்ட அதீத நம்பிக்கைக் கூடாக மக்கள் அவனுக்குத் தம்மை அடிமையாக்கிக் கொள்வதும், அந்தத் தலைவன் அம் மக்களின் உள்ளத்திலும், அறிவிலும் அமர்ந்துவிடுவது வசீகரத் தலைமைத்துவத்தினது தன்மையாகும். மாறாக அதிகாரத்தைக் கைப்பற்றிய ஒரு தலைவன் அதனைப் பிரயோகித்து மக்களை மயக்குவதோ, பணியவைக்க நிர்ப்பந்திப்பதோ வசீகரத் தலைமைத்துவம் ஆகாது. (வில்சன், அ. ஜெ.1981, ப.01)

வசீகரத் தலைமைத்துவம் என்ற அபூர்வமான இயல்பு ஜீ. ஜீ. பொன்னம்பலத்திடம் காணப்படுகிறது. 1934இல் இருந்து 1960ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக 26 ஆண்டுகள் மக்கள் தமது பிரதிநிதியாக ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை பாராளுமன்றம் அனுப்பியிருந்தனர். ஏறக்குறைய 31 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இவர் வகித்துள்ளார். 1934, 1936, 1947, 1952, 1956, 1965 என ஆறு தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளமையைக் காண முடிகிறது. தமிழ் காங்கிரஸ் கட்சியின் தீவிர விசுவாசிகள் "எங்கள் பலம் பொன்னம்பலம்", "பாகிஸ்தானுக்கு ஜின்னா, இலங்கைக்கு பொன்னா" (குமரகுருபரன்,ந: 2014, நேரடி நேர்காணல்) என ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமைத்துவத்தைப் புகழ்ந்து போற்றியுள்ளமையைக் காண முடிகிறது. ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட வினாக்கொத்து ஆய்வில் ஜீ. ஜீ. பொன்னம் பலத்திடம் வசீகரத் தலைமைத்துவ இயல்பு உண்டு என்பதனை 56% மானவர்கள் முழுமையாக ஏற்றுக் கொள்கின்றனர். 28% மானவர்கள் பெருமளவு ஏற்றுக் கொள்கின்றனர். 10% மானவர்கள் குறைந்தளவு ஏற்றுக் கொள்கின்றனர். 02% மானவர்கள் மிகக் குறைந்தளவு ஏற்றுக் கொள்கின்றனர். 04% மானவர்கள் முற்றாக நிராகரிக்கின்றனர். இதனை பின்வரும் வட்டவரைபின் ஊடாகக் காட்ட முடியும்.




**ஆதாரம்:- வினாக்கொத்து பகுப்பாய்வு**

**(ii) தர்க்கரீதியான பேச்சாற்றல்**

ஒரு தலைவனிடம் காணப்பட வேண்டிய முக்கியமான இயல்பு தான் கூறவந்த விடயத்தை மிகத் தெளிவாகக் கூறுகின்ற தர்க்கரீதியான பேச்சாற்றல் ஆகும். ஜீ. ஜீ. பொன்னம்பலத்திடம் இவ்வாற்றல் அதிகளவு காணப்பட்டது. பாடசாலைக் காலத்திலேயே சிறந்த பேச்சாற்றல் உடைய மாணவனாக ஜீ. ஜீ. பொன்னம்பலம் திகழ்ந்துள்ளார். இங்கிலாந்தில் சட்டக் கல்லூரியில் படித்த காலத்தில் இவ் ஆற்றல் புடம் போடப்பட்டு அதனை வெளிப்படுத்தும் காட்சிக் கூடமாக பாராளுமன்றத்தைப் பொன்னம்பலம் பயன்படுத்தியிருந்தார். எடுத்துக்காட்டாக 1958ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் அவசர காலநிலைமை தொடர்பான விவாதத்தின்போது திரு. ஜே. ஸீ. முனசிங்கா சிலாபத்தில் குழப்பங்கள் சம்பவிக்கவில்லையா? என வினவியபோது ஜீ. ஜீ. பொன்னம்பலம்.

" என்னைக் குறுக்கு
விசாரணை செய்ய
வேண்டுமென அவர்
எண்ணுவதனால் அதற்கு
அவருக்குரிய நேரம் வரும்
வரை காத்திருக்கட்டும் குறுக்கு
விசாரணை செய்யப்படுவதற்கு
நான் அவ்வளவு இலகுவான
பேர்வழி அல்லன்."

(Parliamentary Debates (Hansard), *1958 - 1959*, Volume *31*, p.*150*)

நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் சென்று பரவிய குழப்பமும், கொந்தளிப்பும் முற்றிலும் உறுதியான கட்டுக்கோப்புடன் இருந்தது. பொதுவாக மக்களைத் தாக்கியவர்கள் வெளியூர்களிலிருந்து இதற்கென்று வரவழைக்கப்பட்டவர்கள் என்பது பலர் கூறியதிலிருந்து தெரிகின்றது. எல்லாம் நடந்து முடிந்த பிற்பாடு உள்ளூர் வாசிகள் அவர்களைத் தங்கள் பாதுகாப்பாளர்களாக நம்பியதுதான் வேடிக்கை. பொலிஸ் உடையில்கூடப் பலர் கார்களில் அங்குமிங்கும் போய் மக்களை வெளியேறும்படி கேட்டுக் கொண்டார்கள். எதற்காக? வசதியாக வீடுகளை உடைத்துக் கொள்ளை அடிப்பதற்காக அதெல்லாம் மக்களுக்குத் தெரிந்தது தான். இன்னும் ஒரே ஒரு விடயம்தான் மக்களுக்குச் சொல்வதற்கிருக்கிறது. இத் தகாத சம்பவங்கள்

நடைபெறத் தொடங்கியது முதலாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயிர்ச்சேதம் ஒன்றுகூடச் சம்பவிக்கவில்லை என்பதை எனது மக்கள் சார்பாக நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக்கூடியதாயிருக்கின்றது. நாடு முழுவதிலும் இவ்வாறு பெருமையுடன் கூறக்கூடிய மாவட்டம் யாழ்ப்பாண மாவட்டமே ஆகும்' (Parliamentary Debates (Hansard), 1958 - 1959, Volume 31, p. 150) எனத் தெளிவாக, நேர்த்தியாக, எதிரணியின் தலையீடுகளை பேச்சின் தொடக்கத்திலேயே தடுத்து நிறுத்தி தான் கூறவந்த விடயத்தை முன்வைப்பதனைக் காண முடிகிறது.

1965ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஆற்றிய உரை சர்வதேசரீதியில் பாராட்டினைப் பெற்றது. இவ் உரையில்

"பேச்சு முடிந்ததுதான் தாமதம் ஒரு மந்திரத்தால் கட்டுண்டு போயிருந்த அந்த மாசபையினர் ஏகோபித்துக் கரகோசம் செய்து தமது மகிழ்ச்சியையும், கரிசனையினையும் தெரிவித்தனர். திரு. பொன்னம்பலத்தின் பேச்சு ஐ. நா. சபையின் பொதுச்சபை மண்டபத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் வெண்கல நாதமாக எதிரொலித்தது. எல்லோரும் சொக்கினாரென ஒரு பத்திரிகை நிருபர் குறிப்பிட்டுள்ளார். 117 உலக நாடுகள் கூடிய இச்சபையில் இதற்கு முன்பு எப்போதுமே ஒரு கன்னிப்பேச்சு. இப்படியான வரவேற்பையும், பாராட்டுதலையும் பெற்றதில்லை. இலங்கைக்கான அமெரிக்கத் தூதராக இருந்த செல்வி பிரான்சிஸ் வில்லியம், பொன்னம்பலம் பேசிவிட்டு உட்கார்ந்ததுதான் தாமதம் செல்வி வில்லியம் திரு. பொன்னம்பலம் அமர்ந்திருந்த இடத்திற்கு ஓடோடிச் சென்று அவர் கையைப் பற்றிக் குலுக்கிக் கொண்டே பிரமாதம், பிரமாதம் தங்களைப்பற்றி நான் மிகவும் பெருமையடைகின்றேன்". (வஸ்தியாம்பிள்ளை, ஏ,எஸ்:1967,பக் 68-69) எனக் குறிப்பிட்டார்.

மேற்குறித்தவாறு ஜீ. ஜீ. பொன்னம்பலம் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் தனது தர்க்கரீதியான பேசாற்றலை வெளிப்படுத்தி வந்ததனை காணமுடிகிறது. இருந்த போதிலும் இவ் ஆற்றலினால் சிறுபான்மை இனக்குழுமங்களிற்கு பெரியளவில் எந்த நன்மைகளும் கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும். குறிப்பாக 1956ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் கட்சி படுதோல்வியடைந்ததைத் தொடர்ந்து பாராளுமன்றில் செல்வாக்குச் செலுத்தும் வலிமையற்ற கட்சியாகவே தமிழ்க் காங்கிரஸ் காணப்பட்டது எனலாம்.

### (iii)விடாமுயற்சியுடன் காரியம் சாதிக்கும் இயல்பு

ஜீ. ஜீ. பொன்னம்பலத்திடம் காணப்பட்ட மற்றுமொரு தலைமைத்துவப் பண்பு விடாமுயற்சியுடன் எடுத்த காரியத்தைச் சாதித்தல் ஆகும். தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதியில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றபோது தமிழரசுக்கட்சி திருகோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்படல் வேண்டும் என்ற கொள்கையில் விடாப்பிடியாக நின்றது. அதேவேளை தமிழ்க் காங்கிரஸ் கட்சி யாழ்ப்பாணத்தில் இந்தப் பல்கலைக்கழகம் அமைக்கவேண்டும் என்ற கொள்கையில் நின்று இறுதியாக ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் கோரிக்கை வெற்றி பெற்றது.

### (iv) அடிபணியாமை

ஜீ. ஜீ. பொன்னம்பலத்திடம் காணப்பட்ட மற்றுமொரு இயல்பு அடிபணியாமை ஆகும். பாராளுமன்ற விவாதங்களிலும் சரி, கட்சிக் கூட்டங்களிலும் சரி ஏனையவர்களுக்கு அடிபணியாது காரிய மாற்றும் தலைமைத்துவமாக ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமைத்துவம் காணப்பட்டது. எடுத்துக்காட்டாக 1958 ஆம் ஆண்டு வன்முறைகளை அடுத்து அவசரநிலை தொடர்பான விவாதத்தில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள்,

"தயவுசெய்து பேச்சின் நடுவே தலையிட வேண்டாம். மக்களைப் பெருந்தொகையாக இவ்வாறு ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு அனுப்புவதற்குத் தமக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதாக முதலமைச்சர் கூறியது எனக்குக் கேட்டது. அதை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். ஆனால் மக்கள் என்னவோ தங்கள் ஊர்களுக்குப் போக விருப்பங் கொண்டிருக்கிறார்கள். கட்டவிழ்த்து விடப்படுகின்ற நரக இம்சைகளுக்கு விலகி நிற்கவே அவர்கள் விரும்புகிறார்கள். கலகங்கள் ஓய்ந்து பழைய நிலைக்குத் திரும்பவும், திருப்தியாக உண்ணக் கிடைக்காது போனாலும், ஆறுதலாக நீராடி அமைதியாக உறங்குவதற்குமே அவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் அனேகர் தமது உடமைகளை இழந்திருக்கிறார்கள். பலர் எவ்வளவோ துன்பங்களை அனுபவித்திருக்கிறார்கள். காணச் சகிக்காத பல கொடுமையான காட்சிகளைக் கண்டிருக்கின்றார்கள். பெருமை, செல்வாக்கு, அந்தஸ்து என்பன பற்றித் தயவுசெய்து போலி எண்ணங்கள் வைத்திருக்க வேண்டாம். நீங்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி இது விடயம் மக்களை ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்துக்கு அனுப்பும் இடமாற்ற பிரச்சினை ஆகாது. ஆதலால் பல கஸ்டங்களுக்கும், சங்கடங்களுக்கும் ஆளாகித் தங்கள் ஊர்களுக்குத் திரும்ப எண்ணும் அகதிகளுக்கு எவ்வித வசதி சலுகைகளும் செய்து கொடுக்க மறுத்து மேலும் இடையூறுகள் விளைவிக்கும் அளவுக்குத் தவறான எண்ணங் கொள்ளக்கூடாது எனக் கேட்டுக் கொள்கின்றேன்" (Parliamentary Debates (Hansard), 1958 - 1959, Volume 31, p. 160)

என ஜீ. ஜீ. பொன்னம்பலம் நெருக்கடியான சூழலில் தனித்து நின்று அடிபணியாமையுடன் வாதிட்டதனைக் காணமுடிகிறது.

**2) ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமைத்துவ பலவீனங்கள்**

ஜீ. ஜீ. பொன்னம்பலம் சிறந்த குற்றவியல் சட்டவிற்பனராகவும், 31 வருடங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போதிலும், இவருடைய காங்கிரஸ் கட்சிச் செயற்பாடும், கட்சிக்கு இவரால் வழங்கப்பட்ட தலைமைத்துவம் தொடர்பாக பலவிதமான விமர்சனங்கள் காணப்படுகின்றன.

**(i) தூரநோக்கற்ற தன்மையும் நிலையான கொள்கையின்மையும்**

இவருடைய தூரநோக்கு அற்ற தன்மை என்பது இவரது கொள்கையின் மூலம் வெளிப்படுத்தப்படுவதைக் காண்கின்றோம். அந்த வகையில் சம பிரதிநிதித்துவம் 50 : 50 என்ற கோரிக்கை கன்சவேட்டிக் கட்சியில் மிக பிற்போக்கான சிலர் ஆதரித்த ஒரு காலனித்துவ முறையாகும். அதாவது நிரந்தர காலனித்துவமுறை இருந்தால்தான் இது சரிவரும். இருந்தபோதும் ஜீ. ஜீ. பொன்னம்பலம் நிரந்தர காலனித்துவ ஆட்சியைப்பற்றி சிந்தித்தாரே தவிர சுய ஆட்சிபற்றி சிந்திக்கவில்லை.

1945இல் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி 50 : 50 என்ற கோரிக்கையை மிகத் தீவிரமாக வலியுறுத்தியது. பின்னர் அது சாத்தியமற்றுப்போக 1948இல் தமிழ் மக்களின் எதிர்காலம் பெரும்பான்மை இனத்தின் நல்லெண்ணத்திலும், ஒத்துழைப்பிலுமே தங்கியுள்ளது. (The Future of the Tamil People depends on the goodwill and Co-operation of the majority Community) எனக் குறிப்பிட்டு UNP அரசாங்கத்துடன் இணக்க அரசியலை முன்னெடுத்தனர்.

"1953இல் டட்லி தமிழ் மக்களுக்கு நண்பன், கொத்தலாவலை விரோதி" என்ற அடிப்படையில் செயற்பட்ட பொன்னம்பலம் 1958ஆம் ஆண்டு அவசரகால நிலைமை

தொடர்பான விவாதத்தில் உரிமைகள், வாழ்வதற்கான உத்தரவாதம் இல்லாதபோது தனிநாடு தவிர்க்க முடியாதது எனப் பாராளுமன்றத்தில் விவாதித்தார். பிற்பட 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை பண்ணாகத்தில் இடம்பெற்ற மாநாட்டில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தார்.

**(ii) உட்கட்சி ஜனநாயகம் கட்சியில் பின்பற்றப் படாமை.**

ஓர் அரசியல் கட்சியின் நிலைத்திருப்பிற்கும், வளர்ச்சிக்கும் உட்கட்சி ஜனநாயகம் அடிப்படையானதும், ஆதாரமானதுமான விடயமாகும். தமிழ்க் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் அங்கு உட்கட்சி ஜனநாயகம் பின்பற்றப்படவில்லை. 1944இல் கட்சி உருவாக்கப்பட்டதிலிருந்து 1977கள் வரைக்கும் ஜீ.ஜீ. பொன்னம்பலமே கட்சியின் தலைவராக இருந்து சகல நடவடிக்கைகளையும் தீர்மானிப்பவராக காணப்பட்டார். கா. சங்கரப்பிள்ளை, தா. திருநாவுக்கரசு, மு. சிவசிதம்பரம், த. சிவசிதம்பரம் போன்றோர் கட்சியில் பெயரளவு அதிகாரிகளாகவே காணப்பட்டனர். ஜீ. ஜீ. பொன்னம்பலம் மாத்திரமே உண்மை நிர்வாகியாகக் காணப்பட்டார். இத்தகைய போக்கானது 1977இற்கு பின் கட்சியில் பாரிய தாக்கத்தைச் செலுத்தியிருந்தது. குறிப்பாக கட்சியை வழிநடத்திச் செல்வதற்குரிய அனுபவமும், ஆளுமையும் மிக்க தலைமைத்துவங்கள் போதாமல் இருந்தமையால் கட்சி மிக மோசமான வீழ்ச்சியைச் சந்தித்தது.

**(iii) கட்சிச் செயற்பாடுகளை வடமாகாணத்துடன் பெருமளவு மட்டுப்படுத்தியமை.**

தமிழ்க்காங்கிரஸ் கட்சி 1947ஆம் ஆண்டுத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலைத் தொகுதியில் இருந்து ஓர் ஆசனத்தைக் கைப்பற்றிக் கொண்டது. எஸ். சிவபாலன் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எனினும் பின்னர் இடம்பெற்ற எந்த ஒரு தேர்தலிலும் காங்கிரஸ் கட்சி கிழக்கு மாகாணத்தில் இருந்து எந்த ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. அதேவேளை கிழக்கு மாகாணத்தில் அரசியல்கட்சி செயற்பாடுகள், கூட்டங்களைக் கூட்டுதல், மாநாடுகளை முன்னெடுத்தல் போன்ற எந்த ஒரு செயற்பாட்டினையும் தமிழ்க்காங்கிரஸ் முன்னெடுக்கவில்லை.

**(iv) இந்திய வம்சாவளித் தமிழர்களதும் முஸ்லீம்களதும் நலன்கள் கவனத்தில் கொள்ளப்படாமை.**

1949இல் மலையகத் தமிழர்களின் பிரச்சினையால் பிளவடைந்த தமிழ்க் காங்கிரஸ் கட்சி மலையக மக்களின் நலன்கள் எவற்றையும் கவனத்தில் எடுக்கவில்லை. இதனை ஜீ. நடேசன் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு சிறுபான்மை பிரதிநிதிகள் எனப்படுவோர் கோடரிக் காம்புகளாகச் செயற்படும் வரலாறு இன்று நேற்றல்ல, சுதந்திரத்தின் ஆரம்பத்திலிருந்தே தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ் பிரதிநிதிகளின் இந்தத் தீர்க்க தரிசனமற்ற நடவடிக்கையின் காரணமாகவே இலங்கைத் தமிழ்த் தேசியம் என்ற வரையறைக்குள் மலையகத் தமிழர்கள் தம்மை உட்படுத்தாது தனித் தேசிய இனமாக தம்மை வரித்துக்கொள்ள சாபமிட்ட முதலாவது நிகழ்வாகும். இந்த நிகழ்வின் பின்பே தமிழரின் பலம் பாதிக்கப்படத் தொடங்கியது (நடேசன், ஜீ.2000: ப.29)எனக் குறிப்பிடுகின்றார்.

அதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் மாநகரசபை 14 ஆம் வட்டாரத்தில் உள்ள ஒரு சொற்ப அளவான முஸ்லீம்களுடன் மாத்திரம் தமிழ்க்காங்கிரஸ் கட்சி தனது அரசியலை நிறுத்திக் கொண்டது. எம். எல். சுலைமான் என்பவர் தமிழ்க்காங்கிரஸ் சார்பாக மேயராக தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் தேசியரீதியில் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த முஸ்லீம்களின்

நலன்களைக் கவனத்தில் எடுக்கவோ அல்லது அவர்களை இணைத்து அரசியல் பயணத்தை முன்னெடுக்கவோ காங்கிரஸ்கட்சி தவறியமை பாரிய வரலாற்றுத் தவறாகும்.

### (v) கிராமப்புற ஏழைமக்களின் நலன்களை கவனத்தில் எடுக்காமை

ஜீ. ஜீ. பொன்னம்பலம் தேர்தல் காலங்களில் மட்டும் தமிழ்ப் பிரதேசத்தில் வாழ்ந்து தேர்தல் பிரசார நடவடிக்கையை மேற்கொண்டு வெற்றிபெறும் வரை யாழ்ப்பாணத்தில் இருப்பார். பின்பு கொழும்பு சென்று விடுவார் என்ற கருத்துநிலை காணப்படுகின்றது. குறிப்பாக ஆடம்பரவாழ்வும், சுகபோக சிந்தனையும் கொண்டவராக இவர் நோக்கப்படுகின்றார். மேலும் தமிழரசுக்கட்சி சமபந்தி போசனம், ஆலயப் பிரவேசம் போன்ற முற்போக்கான சாதி ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தபோது ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அவரது தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் அத்தகைய செயற்பாடுகள் எதனையும் முன்னெடுக்க முடியாமல் போயிற்று. இதனால் கட்சியானது ஓர் எல்லையைத் தாண்டி வளர முடியாமல் போயிற்று.

### முடிவுரை

சில அசாதாரண திறமைகளை இயல்பாக பெற்றிருந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் தான் உருவாக்கி தலைமை தாங்கிய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை முன்னிலைப்படுத்துவதில் முனைப்பாக முயன்றார். இலங்கையில் சுதந்திரத்திற்கு முந்திய இரு தசாப்தங்களிலும், பிந்திய இரு தசாப்தங்களிலும் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தனது ஆளுமை வீச்சால் சில தடங்களைப் பதித்தது உண்மையாகும். ஆனால் தலைமைத்துவ ஆற்றலுக்கு சமாந்தரமாக அவரால் தனது கட்சியை நகர்த்திச் செல்ல முடியவில்லை. தமிழ்த் தேசியத்தை வலியுறுத்திய தமிழரசுக்கட்சியின் வளர்ச்சியும், சவால்களும் இதற்கு முக்கிய காரணமாகும். அவரது உயர்குழாம் மனோபாவங்களும் சில வழிகளில் இதற்கு துணையாக இருந்தது. தவிர, பெரும்பான்மையினத்தின் ஆதிக்கம் மிகுந்ததும் பன்மைச் சமூகங்களைக் கொண்டதும், ஜனநாயகத்தை பரீட்சித்து வருகின்றதுமான அபிவிருத்தி அடைந்துவரும் ஒரு நாடாகிய இலங்கையில் அதிகாரமற்ற சிறுபான்மை இனமொன்றின் தலைவர் என்ற ரீதியில் ஜீ. ஜீ. பொன்னம்பலத்திற்கு பல மட்டுப்பாடுகள் காணப்பட்டன. இதனால் ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஓர் அரசியல் தலைவராக ஏற்றுக் கொள்ளப்படும் அளவிற்கு, அவர் பாராளுமன்ற ஜனநாயகத்திற்கும் அதன்மூலம் இலங்கைத் தமிழர் அரசியல் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யவில்லை.

### உசாத்துணை நூல்கள்


1. Ponnambalam, G.G., (2001), The Marathan Crusade for Fifty: Fifty (Balanced Representation) in the State Council -1939, Manimekalai Prasuram, Chennai.
2. Silva de, G.P.S.h;., (1979), A Statistical Survey of Elections to the Legislatures of Sri Lanka 1911-1977, Marga, Colombo.
3. Sirsiskar,V.M.,(1965), Political Behaviour in India, Manaktala and Sons, Bombay.
4. Wilson, A.J., (1994), S.J.V.Chelvanayakam and the Crisis of Sri Lankan Tamil Nationalism 1947-1977, C.h;urst & Co [Publishers] Ltd., London.

5. அருணாசலம், கு.,(2012), இலங்கை அரசியல் வரலாறு இழப்புக்களும் பதிவுகளும், மகாவெலி வெளியீடு, சாய்ந்தமருது.

6. நடேசன். ஜீ., (2000), இலங்கை இன முரண்பாடுகளின் வரலாறு, ஒரு ஆவணப் பதிவு, அபிராமி விளம்பர நிறுவனம், மட்டக்களப்பு.

7. பாலசுந்தரம், க., (2011), சாணக்கியன் வன்னியசிங்கம், 100வது ஆண்டு நினைவு மலர், ஏ. ரி. பப்பிளிஸ்ட் (பிறைவேட்) லிமிற்றெட், கொழும்பு.

8. புத்தொளி, (1977), தமிழர் தலைமகன், ஜீ. ஜீ. பொன்னம்பலம், சிவகுமாரன் அச்சகம், அச்சுவேலி.

9. முருகரத்தினம், க., (1967), தமிழரின் தலைசிறந்த தலைவர், உயர்திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் வாழ்க்கை வரலாறுச் சுருக்கம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், யாழ்ப்பாணம்.

10. விநாயகமூர்த்தி, அ., (2003), மாபெரும் தலைவர் சட்டமாமேதை அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் நினைவுக்கட்டுரைகள், யாழ்ப்பாணம்.

11. வில்சன், அ. ஜெ., (1981), சா.ஜே.வே.செல்வநாயகம்: நெருக்கடி காலத் தலைமைத்துவம் பற்றி நினைவு அலைகளின் உருவம் ஒன்றின் அடிப்படையினதோர் ஆய்வு, தந்தை செல்வா அறங்காவலர் குழு, யாழ்ப்பாணம்.

12. Parliamentary Debates (Hansard)., (1958 - 1959), Volume 31, Ceylon Government Press, Colombo.